மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.53,09,64,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.34,45,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28–8–2006) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்.

25. 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(அ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

91. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1997 முதல் 31-3-1998 வரையிலான கால அளவுக்கான முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

2006 ஆகஸ்ட் 25]

92. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1998 முதல் 31-3-1999 வரையிலான கால அளவுக்கான முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

93. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1999 முதல் 31-3-2000 வரையிலான கால அளவுக்கான முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

94. மானியக் கோரிக்கை எண்35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

95. மானியக் கோரிக்கை எண்38 பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

96. மானியக் கோரிக்கை எண்38-தேர்தல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

97. மானியக் கோரிக்கை எண்16-தமிழ்வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ்வளர்ச்சி-பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

98. மானியக் கோரிக்கை எண்18 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

99. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006-2007. (தமிழ்)

100. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)